**கொடகவெல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 09 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 07 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொடகவெல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 295,700 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி சமமான பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 10 நிலையான வைப்புக் கணக்களுக்குரியதான மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 128,091 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதும் வேலை ஆரம்பித்த அல்லது ஆரம்பிக்காத உடன்படிக்கைக் காலத்தை விஞ்சிய 02 வேலைகளுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 991,869 கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் மூலதனச் செலவினம் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் என்பன அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மாகாண சபை நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தெலிஸ்ஸ கெட்டுஅதுற வீதிக்கு கொங்ரீட் இடும் வேலைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 187,327 தொகை கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதி சமமான பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட 02 வேலைகளுக்குரிய கடன்கொடுத்தோர் மிகை ஒதுக்கீடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,326,946 தொகை கடன்கொடுத்தோர் கணக்குகளிலிருந்து அகற்றப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 1,194,651 தொகை மாத்திரம் அகற்றப்பட்டமையின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான

கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி ரூபா 132,295 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 பெறவேண்டிய கணக்குகள்**

ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் சேவையிலிருந்து நீக்குதல், சேவையைக் கைவிட்டுச் செல்லல், பணியிடமாற்றம் பெற்றுச் செல்லல், மரணித்தல் மற்றும் ஓய்வு பெற்றுச் சென்றதன் காரணமாக அறவீடுகள் நிலுவையாக இருந்த ரூபா 97,380 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

**1.3.3 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | நிதிப்பிரமாணம் 1646 | சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணை 01 வருடம் முதல் 02 வருடம் வரையான காலம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 11 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 அந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி | |
| | IV (ஆ) பகுதியின் 05 ஆம் இலக்கத்தின் கீழுள்ள உப விதி | அனுமதியற்ற நிர்மாணப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 23 நிர்மாணங்களை அகற்றுமாறு அல்லது சட்டரீதியாக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தும் 2018 ஏப்ரல் வரையிலும் அந்த நிர்மாணங்களை அகற்றுவதற்கோ அல்லது சட்டரீதியாக கொண்டு வரப்படாமையினால் உரிய நிர்மாணங்களை அகற்றுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,475,978 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,889,563 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,223,607 | 6,419,784 | 6,093,202 | 3,101,940 | 2,912,219 | 6,872,398 | 4,589,686 | 2,948,339 |
| வாடகை | 7,850,458 | 7,163,848 | 7,106,582 | 405,952 | 8,443,567 | 6,767,896 | 6,346,572 | 369,572 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,153,200 | 1,410,043 | 1,459,693 | - | 1,169,200 | 1,172,157 | 1,114,407 | - |
| ஏனைய வருமானம் | 14,335,487 | 14,919,263 | 10,651,425 | 18,101,766 | 10,592,466 | 9,875,095 | 10,560,263 | 11,453,969 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது அனுமதிப்பத்திரக் கட்டண வருமான விடயத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட 27 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் ஆதனவரி, வாடகை, சேவைகளுக்கான கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும், ஏனைய வருமானம் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட முறையே 02 சதவீதம், 09 சதவீதம், 16 சதவீதம், 87 சதவீதம், 05 சதவீதம் மற்றும் 18 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

#### 2.2.3 வீத வரியும் வரியும்

(அ) ஆதன வரி

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 2,953,562 ஆக இருந்ததுடன் அதில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற 12,136 அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 53,778 கூட்டுமொத்தமாகக் காணப்பட்டது. அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக சபையின் செயற்பாடு நிலை நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) ஏக்கர் வரி

-------------------

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 80,047 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களை விட பழைய 65 அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 56,437 ஆகக் காணப்பட்டது.

**2.2.4 ஏனைய வருமானம்**

------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 02 ஏக்கர் அளவிலான சபைக்குச் சொந்தமான பலவின்ன பண்ணையில் கறி மிளகாய் மற்றும் தெங்கு பயிர்ச்செய்கையிலிருந்து 2017 சனவரி முதல் செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை வருமானம் முறையே ரூபா 279,263 மற்றும் ரூபா 20,280 தொகை ஆக இருந்தன. 2017 மார்ச் மாதத்தின் பின்னர் தேங்காய் விளைச்சல் அதிகரிக்காதிருந்ததுடன் கறி மிளகாய் பயிர்ச் செய்கையும் சரியான பிரகாரம் பராமரிக்கப்படாதிருந்தமை களப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. போதியளவான ஊழியர் எண்ணிக்கையை ஈடுபடுத்தி சரியான மேற்பார்வையின் கீழ் பயிர்ச்செய்கையை நடாத்திச் செய்வதன் மூலம் உயர்ந்த வருமாமொன்றை உழைத்துக் கொள்வதற்கு இயலுமை காணப்பட்டும் சபை அது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) றக்வான பிரதேசத்தில் 02 மீன் தட்டிகளிலிருந்து 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 155,075 கூட்டுத்தொகையான நிலுவை வாடகையை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. இரண்டு மீன் கடைகளை நடாத்திச் சென்ற நபரினால் அந்த ஆதனங்கள் வேறு தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், உரிய சொத்தைத் தீர்த்து உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சபை தவறியமையின் காரணமாக அது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க முடியாதிருந்தது.

**2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆகஸ்ட் முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக எம்பிலிப்பிட்டிய மற்றும் பெல்மதுள்ள மாவட்ட நீதிமன்றங்களிலிருந்து அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எம்பிலிப்பிட்டிய காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2017 ஆம் ஆண்டிற்காகவும் இரத்தினபுரி காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் அண்டு வரையான 03 வருட காலங்களுக்காகவும் அறவிட வேண்டிய முத்திரை வரி வருமானத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------------

**3.1 செயலாற்றல்**

----------------------

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவை மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நலன் விவகாரம், வசதிகள் மற்றும் நலன்புரிகள் போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) வருடாந்த திட்டங்களுக்குப் புறம்பான செயற்பாடுகள்**

2017 ஆம் ஆண்டின் பாதீட்டின் பிரகாரம் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 5,350,000 கூட்டுத்தொகையான 11 அபிவிருத்தி உத்தேசத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதில் எந்தவொரு செயற்திட்டமும் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அதற்குப் பதிலாக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 5,790,864 தொகையான 11 வேறு அபிவிருத்தி செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. எனினும், உள்ளூராட்சி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட அந்த வேலைகள் மாத்திரம் அமுல்படுத்த வேண்டி ஏற்பட்ட காரணத்தால் பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட அபிவிருத்தி உத்தேசத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு சபைக்கு முடியாதிருந்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பிரதேசத்தில் கழிவுப் பொருட்களைச் சேகரித்தல் தொடர்பான கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வீதியின் இருப்பக்கமும் கணிசமான அளவில் கழிவுப் பொருட்கள் ஒன்று சேர்த்திருந்தமை களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. கழிவுப் பொருட்களைச் சேகரிக்கும் போதும் அவற்றை அகற்றும் போதும் உக்கும் மற்றும் உக்காதவைகள் என்பன வேறுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அங்கு முறையற்ற வகையில் காடுகள் வெட்டி அகற்றப்பட்டுக் கொண்டிருந்தது. கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்த 03 ஏக்கர் அளவிலான காணியை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக முறையான திட்டமொன்றைத் தயாரித்து அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

(ii) கழிவுப் பொருள் அகற்றும் நிலையம் சபைக்குச் சொந்தமான காணியொன்றாக இல்லாதிருந்ததுடன் அந்தக் காணியை சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கைகள் மெதுவான போக்கில் காணப்பட்டது. கழிவுப்பொருட்களை அகற்றுகின்ற இடத்திற்காக பெறப்பட வேண்டிய சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்குரிய சுற்றாடல் பரிந்துரைகள் 2013 செப்தெம்பர் 13 ஆந் திகதி கிடைத்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய பரிந்துரைகளை அமுல்படுத்தி சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தவறியிருந்தது. இதன் காரணமாக சில வருடங்கள் முதல் சுற்றாடலுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

(iii) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(ix) (ஆ) பிரிவின் பிரகாரம் மலம் அகற்றல் மற்றும் கழிவுப்பொருட்களைக் கொண்டு செல்லல் மற்றும் அதற்காக கட்டணம் அறவிடல், உப விதிகளுக்குரிய விடயமாகக் காணப்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது தொடர்பான உப விதிகளை விதித்து அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிவிக்காமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

றக்வான சந்தை அமைந்துள்ள காணி முறையான பிரகாரம் சபைக்கு கையேற்கப்படாதிருந்ததுடன் அதனைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டிருக்கவில்லை. மிகவும் உடைந்த மற்றும் அழுக்கான நிலையில் காணப்பட்ட அந்த சந்தை உணவு, பாணங்களை விற்பனை செய்வதற்கு பொருத்த மற்ற நிலையில் காணப்படுகின்றமை களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. உள்ளூராட்சி நிறுவனங்களில் சமூக உட்கட்டமைப்பு வசதிகளைக் கட்டியெழுப்பும் மூலதன நிகழ்ச்சித்திட்டம் - 2017 இன் கீழ் சந்தையை நவீனமயப்படுத்துவதற்காக 2017 மார்ச் 22 ஆந் திகதிய கடிதம் மூலம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமிருந்து அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதற்கான அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்படாத கைத்தொழில்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்த போதிலும், அந்த அனுமதிப்பத்திரம் பெறாத கைத்தொழில்களை கண்டறிவதற்கு சபையினால் முறையான திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

2017 இன் பாதீட்டின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 58 மயான நிலங்கள் காணப்பட்ட போதிலும் அதில் 55 இனது அளத்தல் நடவடிக்கைகளைச் செய்து முறையான பிரகாரம் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 விளைவற்ற சொத்துக்கள்**

2016 ஏப்ரல் மாதத்தின் பின்னர் பயன்படுத்தப்படாமல் சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரமொன்று 2017 நவம்பர் 20 ஆந் திகதி வரையிலும் தேவையான பழுதுபார்த்தல்கள் மேற்கொண்டு செயற்படு நிலைக்குக் கொண்டுவருவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பெறுகை

#### பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 26 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 9,250,500 தொகையான மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 08 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் அந்த சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டில் 86 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | செலவினங்கள் இனங்காணப்படாமை |
| | | (ii) | சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டமை |
| | | (iii) | வருமானம் குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டமை. |
| (ஆ) | வருமான நிர்வாகம் | | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | | நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை |
| (ஈ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | கழிவுப் பொருட்களை அகற்றும் முறைமை சுற்றாடலுக்கு சாதகமாக இல்லாமை. |